பாதுகாவலன்
PATHUKAVALAN

## திருதேந்திய திருப்பலி

லத்தீன் திருப்பலி முறையை மீண்டும் அனுமதிக்க திருச்சபை இணங்கியுள்ளது. இதுவரை காலமும் தடைப்படுத்தப்பட்டிருந்த லத்தீன் திருப்பலியில் இனிமேல் ஆர்வமுள்ளோர் பங்கு பற்ற முடியும் என வத்திக்கான் அறிவித்துள்ளது.

RECEIVED
Periodicals Division
Library

மலர்: 117 இதழ்: 15 30-08-1991 (ஆகஸ்ட் 30—செப். 13) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு. விலை ரூபா 3-50

### 31ஆம் திகதி சனிக்கிழமை அதிவண. மல்கம் றஞ்சித் ஆயராக அபிஷேகம்

## தேவத்தை இலங்கைநாயகி பேராலயத்தில்

# கொழும்பு துணை ஆயர் திருநிலைப்படுத்தல்

**கொழும்பு மறைமாவட்ட 2வது துணை ஆயராக ஜூலை 15ஆம் திகதி திருத்தந்தையால் நியமிக்கப்பட்ட அதிவண மல்கம் றஞ்சித் அடிகளாரின் ஆயர் திருநிலைப்படுத்தல் சடங்கில் பத்து மறைவட்டங்களைச் சேர்ந்த பன்னிரு ஆயர்களும் பங்குபற்றுகின்றனர்.**

அருள்திரு. அல்பேட் மல்கம் றஞ்சித் கொழும்பு துணை ஆயராக நியமிக்கப்பட்ட செய்தி கேட்டு அவர் வளர்ந்த ஊராகிய கொழும்பு முகத்துவாரப் பகுதியில் மக்கள் வெடி கொழுத்தி மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

இம்மாதம் 31ஆம் திகதி காலை றாகமவிலுள்ள தேவத்தை இலங்கை நாயகி பேராலயத்தில் புதிய துணை ஆயர் திருநிலைப்படுத்தல் நடைபெறவுள்ளது.

கொழும்பு மறைமாவட்ட புதிய துணை ஆயராக நியமிக்கப்பட்டுள்ள அதி வண. அல்பேட் மல்க்ம் றஞ்சித் அவர்கள் பேறுவளையில் 1947 ஆம் ஆண்டு நவம்பர் 15 இல் பிறந்தார்.

உரோமாபுரியிலும், ஜெருசலேமிலும் உயர்கல்விகளைக் கற்ற அவர் இத்தாலியம், ஸ்பானியம், ஜேர்மன், பிரெஞ்சு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவராவார்.

1975இல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு பமுணுகம, பையாகல, களுத்துறை பங்குகளில் பங்குத்தந்தையாகப் பணி புரிந்து இறுதியாக மறைபரப்புச் சபையின் தேசிய இயக்குனராக பணி புரிந்து வந்தார்.

இலங்கையின் பத்து மறைவட்டங்களின் பன்னிரு ஆயர்களும் தேவத்தையில் நடைபெறவுள்ள ஆயர் திருநிலைப் படுத்தும் சடங்கில் பங்கு பெறவுள்ளனர்.



## மடுத்திருப்பதியில் குருப்பட்டம்

மன்னார் மறைவட்டத்தைச் சேர்ந்த அருட்சகோதரர்கள் செ. ஸ்ரீபன் ராஜா, ஆ. விக்ரர் சோசை ஆகிய இருவரும் மன்னார் ஆயர் பேரருள் திரு தோமஸ் சவுந்திரநாயகம் ஆண்டகை அவர்களால் குருத்துவ திருநிலைக்கு அபிஷேகம் செய்யப்பட உள்ளனர். இவர்களைத் திருநிலைப்படுத்தும் சடங்கு 18-09-1991 புதன், மாலை 5-00 மணியளவில் மடுத் திருப்பதியில் நடைபெறும்.

இவர்கள் தங்கள் குருத்துவ பயிற்சி அனைத்தையும் யாழ். புனித மாட்டீனார் சிறிய குருமடத்திலும், கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார்கள்.



அருட்சகோதரன் செ. ஸ்ரீபன் ராஜா விடத்தல்தீவைச் சேர்ந்த திரு. திருமதி நீ. செபமாலை தம்பதியரின் மூத்த புதல்வன் ஆவார். 20-08-1963 இல் பிறந்த இவர் தமது ஆரம்பக்கல்வியை விடத்தல்தீவு றோ. க. த. க. பாடசாலை, புதுக்குடியிருப்பு (முல்லைத்தீவு) மகா வித்தியாலயம் ஆகியவற்றில் கற்று உயர் கல்வியை யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியில் கற்றுத் தேர்ந்தார்.

இவர் தமது முதற் திருப்பலியை 20-09-1991 வெள்ளிக்கிழமையன்று காலை 7-00 மணிக்கு விடத்தல்தீவு புனித அடைக்கலநாயகி ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.



அருட்சகோதரன் அ. விக்ரர் வங்காலையைச் சேர்ந்த திரு. திருமதி அ. அந்தோனிசோசை தம்பதியரின் கடைசி மகனாவார். 19-03-1964இல் பிறந்த இவர் வங்காலை புனித ஆனாள் மகாவித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியையும், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் உயர்தரக்கல்வியையும் கற்றுத் தேறினார்.

இவர் தமது முதற்பலியை வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் 22-09-1991 ஞாயிற்றுக்கிழமையன்று ஒப்புக் கொடுப்பார்.

## கத்தோலிக்கருக்கு எதிரான வழக்கு தள்ளுபடியானது

(யூக்கன் செய்தி)

நேபாளத்தில் ஒரு கத்தோலிக்க குரு, இரு கன்னியர், ஏழுபொதுநிலையினருக்கெதிராக 5 ஆண்டுகளாக இருந்து வந்த வழக்கு அண்மையில் தள்ளுபடியானது.

1986 இல் இவர்கள் கைது செய்யப்பட்டு ஒருவாரம் சிறை வைக்கப்பட்டபின் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இந்து மதத்தினரை மதமாற்ற முயன்றனர் என்பதே இவர்களுக்கெதிரான குற்றச்சாட்டாகும். இது மட்டுமல்லாமல் அங்குள்ள திருச்சபைத் தலைவர்களும் கிறிஸ்தவர்களும் அடிக்கடி தொல்லைக்குட்படுத்தப் பட்டனர்.

கடந்த மே 22 ஆம் திகதி நேபாளத்தில் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டபின் பிற மதத்தவருக்கெதிரான கெடுபிடிகள் தளர்த்தப்பட்டுள்ளன. புதிய அரசியல் யாப்பின்படி நேபாளம் ஓர் இந்து இராச்சியமாகவே இருந்தாலும் சகல பிரசைகளுக்கும் மதசுதந்திரம் அளிக்கப்படுமென உறுதிகூறப் பட்டுள்ளது.

## நேபாள மன்னர் சமூக நீதிக்காக உழைக்கும்படி கூறுகிறார்

அண்மையில் சனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட நேபாளத்தின் முதற் பாராளுமன்றத்திற் பேசும்போது மன்னர் பீரேந்திரா பாராளுமன்றத்தின் முதற் பணி சமூக நீதியை நிலை நாட்டுவதே எனக் கூறினார்.

பின் தங்கியோருக்கு அபிவிருத்தியின் பயனை அளிக்கக் கூடியதாக நிர்வாக இயந்திரம் திறமையாகச் செயற்படும் படியாக வேண்டிய திருத்தங்களை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

காடழிப்பு, வெள்ளம், மண்சரிவு, மண்ணரிப்பு போன்றவற்றால் சூழல் பாதிப்புறுவதை தடுப்பதற்கு மக்களுக்கு அறிவூட்டுமாறும், மக்கள் தகவல் பெறும் உரிமையைப் பாதுகாக்கும் பொருட்டு எழுத்துச் சுதந்திரத்தை ஊக்குவிக்குமாறும் அவர் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார்.

## புதிய பிரதமருக்கு கத். சங்கத்தின் பாராட்டு

(சார் செய்தி)

அனைத்திந்திய கத்தோலிக்க சங்கம் புதிய பிரதமரான பி. வி. நரசிம்மராவுக்கு தனது பாராட்டுதலைத் தெரிவித்துள்ளது பிரதமருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் சங்கத்தின் தலைவரான திரு சோட்டிபாய் வரலாற்றின் இக்கட்டத்தில் புதிய பிரதமர் சமயச் சார்பற்ற சமூக நீதியின்படி நாட்டை சமாதானத்திலும் முன்னேற்றப் பாதையிலும் வழிநடத்திச் செல்வாரென நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பிறிதொரு கடிதத்தில் சங்கத்தின் செயலாளரான திரு விக்டர் கருணன் பிரதமர் தமது அனுபவத்தையும், ஆற்றலையும் பயன்படுத்தி தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறிய கொள்கையின்படி, சமயச்சார்பற்ற விதத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை உயர்த்த வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் கருத்து

# கிறிஸ்தவ உருவாக்கம்

கிறிஸ்தவ விசுவாசமானது ஒரு நிலையான, வளர்ச்சியற்ற, இழக்க முடியாத ஒரு கொடையல்ல. மாறாக அது நிலைத்திருக்கவும், வளர்ச்சியடையவும். இழந்துவிடாதிருக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டிய ஒன்று.

நீண்ட காலம் மறைக்கல்விப் பணியில் பணிபுரிந்த அருட்தந்தை ஆர். எச். லெஸ்ஸர் என்பவர் தம் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கையில் வழிபாடுகளின் செழிப்பற்ற தன்மை, வழிகாட்டிகளின் துன்மாதிரிகை, விசுவாசிகளின் அக்கறையின்மை, விசுவாசத் தளர்ச்சிக்குக் காரணமாக அமைந்துவிடுகின்றன என ஆராய்கிறார்.

நாளைய திருச்சபை இன்றைய மறைக்கல்வியில் பெரிதும் தங்கியுள்ளது என்ற கருத்தை வலியுறுத்தும் அருட்தந்தை அவர்கள், மறையை நன்கு அனுசரித்து வந்த கத்தோலிக்கர் வழிதவறிச்சென்ற சந்தர்ப்பங்களைச் சுட்டிக்காட்டி அதற்கான காரணங்களை விளக்கியுள்ளார்.

இக்கால மறைக்கல்வி புகட்டும் தன்மையானது மிகவும் வளர்ச்சியடைந்துள்ளது. புதிய அணுகுமுறைகொண்டு புகட்டப்படும் மறைக்கல்வி கிறிஸ்தவ உருவாக்கத்துக்குப் பயன்படவேண்டும்.

ஆனால் இன்றைய தலைமுறையினர் மறை அறிவைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் வெகு குறைவாகவே காணப்படுகின்றன. பாடசாலைக் கல்வியில் சமயபாடம் ஒரு முக்கியமான பாடமாகக் கொள்ளப்பட்ட போதிலும் பாடநெறியில் புகுத்தப்பட்டுள்ள விடயதானங்கள் பூரணமானவையாக இல்லாமையால் முற்றுமுழுதாக மறையறிவைப் பெறும் வாய்ப்பு அற்றுப் போகின்றது.

அவ்வப்போது கல்விக் கொள்கைகளில் கொண்டுவரப்பட்ட மாற்றங்களே இந்தக் குழப்ப நிலையைத் தோற்றுவித்தன. எனவே கிறிஸ்தவ பெற்றோர் மறைக்கல்விப் போதனைக்கு பாடசாலைகளை மட்டும் நம்பியிருப்பது போதாது, மாறாக, பங்குரீதியாக மறையறிவு புகட்டப்பட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

மனித நடத்தை சார்ந்த விஞ்ஞான வளர்ச்சியும், வேதாகமம், இறையியல் துறைகளில் வளர்ந்த புதிய கண்ணோட்டங்களும், தற்கால மறைக்கல்வியைச் செழுமைப்படுத்தியுள்ளன.

இத்தகைய மறைக்கல்வியைப் பெற்றுக்கொள்ள அதிக சந்தர்ப்பங்கள் கொடுக்கப்பட்டால், பிள்ளைகள் அவற்றில் தமது ஈடுபாட்டைக் கண்டு கொள்ளவும், அதிக ஆர்வத்துடன் அவற்றை அணுகவும் கூடியதாக இருக்கும்.

பாடசாலை வேளைகளில் பெறப்படும் மறைக்கல்வி வெகு சொற்பமென உணரப்பட்ட போதிலும் அதற்கு ஈடுசெய்யும் முகமாக மறைவட்ட ரீதியாகவும், பங்கு ரீதியாகவும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை எடை போட்டுப் பார்ப்போம்.

கிறிஸ்தவ பெற்றோர். தமது பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக்க, மேற்கொண்ட முயற்சிகளில் மறை அறிவு வளர்ச்சிக்கான பங்களிப்பில் எவ்வளவுக்கு ஈடுபட்டனர் என்பதைக் கணிப்பிடுவதும் அவசியமாகும்.

திருத்தந்தையர்கள் 6ஆம் சின்னப்பரும், 2ஆம் அருள் சின்னப்பரும் இந்த நோக்கத்துக்காக பெரிதும் பாடுபட்டுள்ளனர். மூலவளம், மூளைவளம் என்பவற்றை நன்கு பயன்படுத்தி, மறைக்கல்வி வளர்ச்சியில் ஈடுபட அவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். எனவே பெற்றோர், ஆசிரியர், குருக்கள் அனைவருமே இதற்கான தமது பங்களிப்பை முழுமையாக வழங்கி எதிர்காலத் திருச்சபையை வளமாக்க முயல வேண்டும்.

# நாளைய திருச்சபை இன்றைய மறைக்கல்வியில் பெரிதும் தங்கியுள்ளது

மிகவும் புத்திக் கூர்மையுள்ள இளைஞன் பாடசாலையிலும் கல்லூரியிலும் திறமைகள் பல சாதித்தவன் மறைக்கல்வியில் தங்கப்பதக்கமும் பெற்றவன். ஆனால் விசுவாசத்தை இழந்தவராக வாழ்ந்து இறந்தார்.

அவன் எனது உடன் பிறந்த சகோதரன். அவன் ஏன் திருச்சபையைக் கைவிட்டான்? என்பதற்கு இன்னும் பதில் தேடிக் கொண்டிருக்கின்றேன்.

தனது படிப்பை முடித்ததும் இராணுவத்தில் சேர்ந்தான். இயல்பாகவே சோ பல் கூடியவன் அவனை விசுவாசத்தில் ஒழுக ஊக்குவிப்பார் ஒருவருமில்லை. எனவே அவன் விசுவாசத்தைக் கை நெகிழ விட்டான். இங்கிலாந்து நாட்டில் அவருக்கு அறிமுகமான பெண் ஒருத்தியைத் திருமணம் செய்தார்.

அவள் திருச்சபையின் விரோதி. இவர்களின் ஐந்து பிள்ளைகளில் எவருக்குமே திருமுழுக்குக் கொடுக்கப்படவில்லை.

இது இவ்வாறு இருக்க! இந்தியாவில் பம்பாய் மறைமாவட்டத்தில் ஏறக்குறைய 35, 000 கத்தோலிக்கர்கள் பிரிவினைக் கிறிஸ்தவ சிறு சபைகளில் சேர்ந்துள்ளனர் என மதிப்பீடப்பட்டுள்ளது.

பெரும்பாலானோர் சிறந்த கத்தோலிக்கப் பாடசாலைகளில் மறைக்கல்வி கற்று மறையை நன்கு அனுசரிக்கும் கத்தோலிக்கராக இருந்தனர் என எண்ணலாம். இருந்த போதும் ஏன் அவர்கள் வழி தவறினார்கள்? இதற்கு மூன்று காரணங்கள் எனக்குத் தோன்றுகின்றன.

1. எமது வழிபாடுகள் செழிப்பற்று வரண்டு காணப்படுவது.
2. கிறிஸ்தவ வாழ்வுக்கு ஊக்கத்தைக் கொடுக்கக் கூடிய முன்மாதிரியான வாழ்வு எமது குருக்கள் துறவிகளால் வாழப்படாமை. உண்மையை உள்ளபடி சொல்ல வேண்டுமானால் அவர்களில் பலரது துன்மாதிரிகையான வாழ்வு.
3 விசுவாசத்தை ஆழப்படுத்தி வளர்ப்பதில் போதிய அக்கறை காட்டப்படாமை.

எனது கணிப்பின்படி மூன்றாவதை நிறைவாக்க முடியுமானால் திருச்சபையின் கவலைகள் பெருமளவு தீரும். ஏனெனில் மக்கள் விசுவாசத்தில் ஆழமாக உருவாக்கப்பட்டால் வறண்ட வழிபாடுகளாலோ, குருக்கள், துறவிகளின் தவறான வாழ்வாலோ மக்கள் மிகவும் பாதிக்கப்பட மாட்டார்கள்.

மறைக் கல்வி கற்பிப்பதிலும் கற்பதிலும் அண்மைக் காலம் வரையும் இறைவனையும் திருச்சபையையும் பற்றி வினா – விடை உருவில் மனனம் செய்து எமது ஞாபக சக்திக்குப் பயிற்சி கொடுத்தோம். ஆனால் அது எம்மை இறைவனுக்கு அண்மையில் எடுத்துச் செல்லவில்லை.

ஆன்மீக வழியிலோ, ஒழுக்க வழியிலோ எமது வாழ்வு முன்னேறவில்லை. மறையைப் பற்றிய அறிவு கொடுக்கப்பட்டதே தவிர கிறிஸ்தவ உருவாக்கம் கொடுக்கப்படவில்லை.

விசுவாசம் என்பது நிலையான, வளர்ச்சியற்ற இழக்க முடியாத ஒரு கொடையல்ல. மாறாக உயிர் வாழும் கிறிஸ்துவோடு ஆள் உறவை வளர்ப்பதற்கான ஒரு சொந்த அர்ப்பணம் என்பதை புரியவைப்பதே மறைக்கல்வியின் மறுசீரமைப்பின் நோக்கமாகும்.

மறைக் கல்வி என்பது விசுவாச உண்மைகளை கற்பிப்பதும் கற்றலும் மாத்திரம் அல்ல. மாறாக இறைவன் – மறையாசிரியர் கற்பவர் ஆகிய மூவரினதும் ஈடுபாட்டுடன், அவர்களுக்கிடையேயான ஆள் உறவு வளர உதவும் தொடர்ச்சியானஓர் படிமுறை. பின்னைய இருவரும் இதனூடாக மாற்றம் அடைகின்றனர். வளமை பெறுகின்றனர்.

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மறைக் கல்வி வகுப்பு இடம் பெற்றாலும், அது நாள் முழுவதும் இடம் பெறுகின்றது. ஒவ்வொரு வகுப்பினதும் நோக்கமானது கற்பவரை இறைவனுக்கு அண்மையில் இட்டுச் செல்வதும், அதே வேளையில் இறைவன் மட்டில், பிறர்மட்டில், தன் மட்டில், உரிய மன நிலையில், நடத்தையில் வளர்ந்து சகல வழிகளிலும் தன்னை முன்னேற்ற உதவுவதும் ஆகும்.

மனித நடத்தை சார்ந்த விஞ்ஞான வளர்ச்சியும் வேதாகமம், இறையியல் துறைகளில் வளர்ந்த புதிய கண்ணோட்டங்களும் மறைக்கல்வியை மிகவும் செழுமைப்படுத்தியுள்ளன.

பிள்ளையின் உள்ளத்தைத் தொடவும், அதன் ஆர்வத்தைத்தூண்டி ஈடுபாடு கொள்ள வைக்கவும், மனித வாழ்வின் ஓர் அனுபவத்தோடுஒவ்வொரு வகுப்பும் ஆரம்பிக்கப்படுகின்றது.

கற்பிக்கப் போகும் பாடத்தின் மையப் பொருளுக்கு பொருத்தமாகத் தெரிந்தெடுக்கப்பட்ட வேதாகமப் பகுதியூடாக மையக்கருத்து தெளிவாக்கப்பட்டு உறுதிப்படுத்தப் படுகிறது.

அக்கருத்து செபநிலையில் தமதாக்கப்பட்டு புரிந்து கொள்ளப்படும்போது அனுபவம் தழுவிய செபத்துக்கு இட்டுச் செல்லும்.

அதைத் தொடர்ந்து ஒரு செயற்பாடு இடம்பெறும். அச்செயற்பாடு தனிநபராகவோ, குழுவாகவோ இடம் பெறலாம். இச்செயற்பாடு உடல் சார்ந்ததாக, உளம் சார்ந்ததாக, ஆன்மீகம் சார்ந்ததாக இருக்கலாம்.

மேற் சொன்னவாறு மறைக் கல்வி புகட்டப்படும் போது அறிவு புகட்டப்படுவது மாத்திரம் அல்ல கற்பவர் ஆளுமையில், நற்குணங்களில் உருவாக்கப் படுகிறார். கிறிஸ்துவை அறிந்து அன்பு செய்ய தூண்டப் படுகிறார். புனிதத்துவத்தின் வித்துக்கள் விதைக்கப் படுகின்றன.

தான் விரும்பி அன்பு செய்யும் கிறிஸ்து என்ற ஆளைப் பற்றி மென்மேலும் அறியவும், அவரை அநேக முறைகளில் அடிக்கடி சந்திக்கவும், ஒரு தாகம் அவரில் வளர்க்கப்படுகின்றது.

விசுவாசம் உருவாக்கப்படுகின்றது. அது மேலும் ஆழமாக, அகலமாக்கப்படுவது ஒரு பெரும் தேவை என உணரப் படுகிறது.

உண்மையான விசுவாச உருவாக்கமாகிய மறைக்கல்வி திருச்சபையின் ஒரு அத்தியாவசியமான செயற்பாடு எனவும், ஆள், மூலவள ஒதுக்கீட்டில் அதற்கு அதிமுக்கிய இடம்கொடுக்கப்பட வேண்டும் எனவும் திருத்தந்தையர்களான 6 ஆம் சின்னப்பரும், 2 ஆம் அருள் சின்னப்பரும் இடித்துரைத்துள்ளனர்.

**அதைக் கடைப்பிடிப்போம்! நாளைய திருச்சபை இன்றைய மறைக்கல்வியில் பெரிதும் தங்கியுள்ளது.**

கருத்து : ஆங்கிலேயரான அருட்தந்தை R. H. லெஸ்ஸர், 62 வயது, மறைக்கல்வி இயக்குனராக 14 வருடங்கள் பணி புரிந்துள்ளார். 2000 க்கும் அதிக கட்டுரைகளும் 50 க்கு கிட்டிய நூல்களும் எழுதியுள்ளார். மூலம்; ஏசியா போக்கஸ் 10-4-91. (தமிழாக்கம்:வார்த்தைப் பணியகம்)

# கத்தோலிக்க பெண்ணுக்கு அரசாங்க பரிசு

இயற்கை நார்களைக் கொண்டு சிறந்த கைப்பணிப் பொருள்கள் தயாரித்தமைக்காக தமிழ்நாட்டிலுள்ள கோட்டாறு மறைமாவட்டத்தைச் சேர்ந்த திருமதி மேரி கத்தறீன் என்பவருக்கு இந்திய அரசின் பரிசு கிடைத்துள்ளது. ஒரு பதக்கம், சான்றிதழ், ரூ. 1000 ரொக்கம் அறுபது வயதின்பின் ரூ 1000 ஒய்வூதியம் என்பன இப்பரிசில் அடங்கும்.

திருமதி கத்தறீன் கடந்த எட்டு ஆண்டுகளாக கைப்பணிகளைக் கற்றுக்கொடுத்து சுய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தியிருக்கிறார். இவரது சங்கத்துக்கு புதுடெல்லியில் நிரந்தரமான ஒரு காட்சியறை உண்டு. அத்துடன் இந்தியாவின் பல்

(தொடர்ச்சி 4ஆம் பக்கம் )

வீட்டுக்கொரு பாதுகாவலன் : உங்கள்பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரக்கம் ஒரு வெளிப்பூச்சா?




''என்னங்க இப்படியே விட்டா கும்பகர்ணன் மாதிரி கிடந்து விடுவிங்களே! எழும்புங்க. பிள்ளைகளும் ரியூசனுக்கு போய் விட்டு வந்திட்டுதுகள்'' என்று மனையாள் ஒரு உலுப்பு உலுப்பி விட்டாள். இன்று சனிக்கிழமை, விடுமுறைநாள் என்றால் கொஞ்சம் நின்மதியாக உறங்க விட்டாளே என்தர்ம பத்தினி என மனதுக்குள் அவளைத் திட்டிக் கொண்டு எழுந்து காலைக் கடனை முடித்து விட்டு சாப்பிட உட்கார்ந்தேன்.

''இந்தாங்க சாப்பிட்டு விட்டு சந்தைக்குப் போய் காய்கறி வாங்கி வாங்க, பிள்ளைகளும் நிற்கிறதோட நேரத்திற்கு சமைத்து விட்டு அம்மாவுக்கு சுகமில்லையாம் போய் பார்த்து விட்டு வரலாம்'' என்றாள் என் தர்ம பத்தினி. ''அப்பா தினமும் மரக்கறியும், மீனும் சாப்பிட்டு அலுத்து போச்சு. இண்டைக்கு கோழி வாங்கி வாங்க'' என்றாள் என் மூத்த மகள். அவளுக்கு ஒத்தூதுவது போல் ''ஓமப்பா'' என்று இராகம் பாடினாள் என் இளைய மகள். என்ர சம்பளம் உங்கட படிப்பு செலவுக்கும், வாழ்க்கைப் படிக்குமே போதுமானதாக இல்லை. அதிலும் கோழி ஒரு கேடா? என கேட்க வாய் எடுத்த எனக்கு என் தர்ம பத்தினியின் பார்வையும் கோழிதான் வேணும் என்று கூறுவது போல இருந்ததால் எதுவும் பேசாமல் காலைச்சாப்பாட்டை முடித்துக் கொண்டு சந்தைக்குச் சென்றேன்.

வீட்டை விட்டு சிறிது தூரம் சென்றிருப்பேன். ஒரு ஓரமாக மக்கள் கூடி நின்று எதையோ பார்த்துக் கொண்டிருந்தார்கள். இளைஞர்கள் சிலரும் அவ்விடத்தை நோக்கி ஓடினார்கள். என்னதான் நடந்துவிட்டது என்று பார்க்கும் ஆவலில் அந்த இடத்திற்கு விரைந்த நான் எட்டிப் பார்த்தேன். இரத்த வெள்ளத்தில் கோழி ஒன்று சிதறிய நிலையில் கிடந்தது. அங்கு நின்ற ஒருவர், 'கண் மண் தெரியாம வாகனத்தை ஓட்டுவதால்தான் இப்படி அவலங்கள் நடக்கிறது. ஒரு வாய் பேசாத பிராணியை அடித்தவன் நிண்டு கூடப் பார்க்காமல் சென்று விட்டான். இப்படிப் பட்டவனைகளையெல்லாம் நடு றோட்டில வைத்து' நாலு சாத்து சாத்தவேண்டும். என சித்தாத்தர் பாணியில் பேசினார். அங்கு வந்த ஒரு கிழவி 'ஐயோ! இப்பதானே முட்டை போட்டு விட்டு வெளியே வந்தாயே!' என ஓலம் போட்டபடி சிதறிய கோழியை எடுத்துக்கொண்டு சென்றாள். சனக்கூட்டமும் அகன்றது. நானும் நகர்ந்து சந்தையை அடைந்தேன்.

அங்கு சென்ற நான் கோழி வாங்குவதற்காக கோழி விற்கும் பகுதிக்கு சென்றேன். அங்கே கோழிகள் கூண்டிலே மரணதண்டனைக் கைதிகள் போல மரணத்தை எதிர் பார்த்த வண்ணம் நின்றன. கோழி விற்பவனோ கையில் ஒரு கூரிய கத்தியுடன் கோழியின் தலையை நறுக்கி உரித்து சிலருக்கு கொடுத்துக் கொண்டிருந்தான். கூண்டிலுள்ள கோழிகளோ! கத்தியோடு நிற்கும் தங்கள் எஜமானையும், தங்களை உணவாக கொள்ள

தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

— க அருள்நேசன் —
குருநகர்

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு - 68

அடைக்கலம்: என்ன குருசுமுத்தண்ணை பதுங்குகுழிக்க இருந்து வாறியள் போல .....

குருசுமுத்தண்ணை : தாரு... அடைக்கலமே நீ எங்க ஓடிற்று வாறாய். இதில இருந்திருக்கலாமே.

அடைக்கலம் : நாங்க சொந்தக்காறர் வீட்ட எல்லோ இருந்திட்டு வாறம்.

குருசு : எது எப்பிடி இருந்தாலும் ஏற்க மாட்டியள் பார். விழுந்தும் மீசையில மண் ஒட்டாத மாதிரி எல்லோ உங்கட கதை இருக்கு. சும்மா சுகம் விசாரிக்க போனியளே. அகதியாகத்தானே ஓடினியள்.

அடைக்கலம் : அது சரி அண்ணே ... பேந்தும் ஓட வேண்டி வருமே ...

குருசு : எதுவும் நிரந்தரமில்லை தம்பி. இதை உணரத்தான் இந்த ஓட்டமும் நடையும் பாரு. நிரந்தர நிம்மதி எல்லாம் நீ செய்யிற நன்மை தீமையைப் பொறுத்தது. பிரச்சனை வரேக்க மட்டும் கடவுளே கடவுளே எண்டு பழியப்போடாம எப்பவும் அவரோட உறவாடிப்பார். அவராலேதான் உனக்குமட்டும் என்ன ... உலகுக்கே அமைதி கிட்டும். இதை உணரும் வரை ஓட்டமும் ஒளிப்பும் தொடரும் தான் தம்பி.

## ஒப்புவித்து விடு!

அழகிய காட்டு மலர்களை பாரீர்!
அவை எவ்விதம் மகிமையாய் வளர்கின்றன.
இரவின் இருட்டில் மறைந்து வளர்கின்றன.
காலை ஒளியிலும், வெய்யிலிலும் வளர்கின்றன.
மலர்ந்து, படைத்தவரின் சிறப்பை வெளிப்படுத்துகின்றன.
இதன் ரகசியம் தான் என்ன,
என்று நீ சிந்தித்ததுண்டோ?
அவரிடம் ஒப்புவித்து விடு!
ஆம். காட்டு மலர்களும் அவ்வாறே செய்கின்றன.
அந்த மலர்களை விட அவரிதய அன்பிற்கு
நீ பாத்திரன் என்பதை அறியாயோ?
பனியின் கீழ் பூக்கும் இனிய
மலரிலும் உன்னை அவர் நேசிக்கின்றார்.
இன்பம், துன்பம் எதுவந்தாலும், அதை
நன்மனதுடன் ஏற்றுவாழ கற்று விடு.
உன்னை அவரிடம் ஒப்புவித்துவிடு!
காட்டு மலர்களாவன எவ்வாறு
இறைவனின் மேற்பார்வையில் வளர்கின்றனவோ
அவ்வாறே நீயும் அவரின் பாதுகாப்பிலுள்ளாய்.
உன் சகல தேவைகளையும் அவர் அறிவார்.
எனவே ஓர் இனிய மலர் மலர்ந்து
படைத்தவரின் மகிமையை வெளிப்படுத்துவது போல,
நீயும் படைத்தவரின் சிறப்பை
வெளிப்படுத்த உன்னை ஒப்புவித்துவிடு!

செல்வி ஷாமினி இம்மானுவேல்
மாத்தளை

## வானொலி நாடக எழுத்துப் பயிற்சி பாசறை

''இந்த மண் எங்களின் சொந்த மண், இந்த மண் வாசனை அந்நியர்களின் அரவணைப்பில் வளரவேண்டிய நிற்பந்தம் எமக்கில்லை. எனவே, எம் மக்களின் கலாச்சாரமும், பண்பாடும் எம் சொந்த மண்ணிலிருந்தே ஒலி அலைகளாக வானொலி என்னும் மகத்தான ஊடகத்தினால் அகில உலகெங்கும் ஒலிபரப்பப் படவேண்டும்.''

கடந்த ஆடி 13 ஆம் 14 ஆம் திகதிகளில் புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற வானொலி நாடக எழுத்துப் பயிற்சிப் பாசறையில் தலைமையுரை நிகழ்த்திய அருள்தந்தை மைக்கல் யோசப் அடிகளார் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் பேசுகையில், வானொலி ஒரு மகத்தான தொடர்புச் சாதனம் என்றும், கற்றவரும் கல்லாதவரும் செவிமடுத்துப் பயன் பெறும் முக்கியமான ஊடகமும் அதுவே என்றார்.

இப்பாசறைக்கு பிரதம அதிதியாகக் கலந்து விளக்கேற்றி வைத்த திருமலை - மட்டுநகர் ஆயர் வந்தனைக்குரிய யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் தனதுரையில், ''அகிலமெங்கும் முன்னணி வகிக்கும் தொடர்புச் சாதனமாகிய வானொலி ஊடகத்தைத் தக்க முறையில் பயன்படுத்தும் முகமாக, இன்று நடைபெறவிருக்கின்ற இப் பாசறையில் கலந்து கொள்ளக் கிடைத்த சந்தர்ப்பத்துக்காக, மகிழ்வோடு, இலங்கைக் கத்தோலிக்க சமூகத் தொலைத் தொடர்பு ஆணை குழுவின் தமிழ்ப் பிரிவின்யாழ்.மறைவட்டம் இம்முயற்சியை எடுப்பது பாராட்டப் பட வேண்டியதே. தலைவரான நான் இந்நிகழ்ச்சியை ஆரம்பித்து வைப்பது அதன் இரட்டிப்பு மகிழ்வைத் தருகிறது'' என்றார்.

நவீன விஞ்ஞான வளர்ச்சி பெற்ற இக்காலத்தில், அமைதிக்கும், ஆக்கத்துக்கும் தொடர்புச் சாதனங்களே முக்கிய இடம் வகிக்கின்றன. மேலை நாடுகளில் இவ்வூடகத்தின் வளர்ச்சியானது பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பி. பி. சி என்றழைக்கப் பெறும் பிரித்தானிய வானொலி நிகழ்ச்சிகள் உலகமெங்கணும் செவிமடுக்கப் படுவது இதற்கொரு சான்றாகும். வானொலியில் நாடகம் மட்டுமல்ல, ஒவ்வொரு நிகழ்ச்சியும் மிகச் சிறப்பாக மேலை நாடுகள் அறிமுகப்படுத்தினும் இலங்கை வானொலியின் தமிழ் நிகழ்ச்சிகள் பாராட்டத் தகுந்த வளர்ச்சி பெறாமல் இருப்பதற்கு தொழில் நுட்பக் கையாட்சியும் ஒரு காரணம். நாம் அறியாதவரோடும் தொடர்பை ஏற்படுத்த வானொலி உலகம் அரிய வாய்ப்பைதருகிறது என்று பேராசிரியர் அருள்தந்தை நி. மரியசேவியர் அவர்கள் தனதுரையில் குறிப்பிட்டார்.

''யாழ்ப்பாண மொழி வழக்கும், மண்வாசனையும் மக்கள் மனதிலே மகிழ்ச்சியூட்டுவதை விடுத்து, வெறும் கேலிக் கூத்தாக மாறிவிட்டது''என்ற அங்கலாய்ப்புடன் உரையாற்றிய திருமதி கோகிலா மகேந்திரன் வானொலி நாடகமும், அரங்க நாடகமும் என்ற தலைப்பில் தொடர்ந்து பேசுகையில், அரங்க நாடகங்கள் கடும் உழைப்புடன் கூடியது ஒன்றென்றும், இயல், இசை, நாடகமெனும் முத்தமிழும் இதில் இணைந்தே அரங்கேறுவதால், பார்ப்பவர்கள் அதில் ஒன்றித்துவிடவும் விரும்பியோ, விரும்பாமலோ முழுவதும் பார்த்துச் செல்லவேண்டிய நிலைக்குள்ளாகின்றார்கள். ஆனால், 'வானொலி நிகழ்ச்சிகள் விரும்பினால் நிறுத்திவிட்டுச் சென்றுவிட முடியும் அதனை நிறுத்தாது காப்பது நிகழ்ச்சி தயாரிப்பை பொறுத்தது என்றும் கூறினார்.

இலங்கை வானொலி நாடக வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்ட திரு. அராலியூர் சுந்தரம்பிள்ளை அவர்கள் ''மலராத மொட்டுக்கள்'' என்ற நாடகத்தைப் பயிலுனருக்காக ஒலிபரப்பியபின் தனதுரையில், ''ஏறக்குறைய 200 நாடகங்களுக்குமேல் வானொலி நாடகங்கள் எழுதி, அதில் 170 நாடகங்கள் ஒலிபரப்பப் பட்டது என்றும், வேறு ஒருவரும் அத்துறையில் அக்கறை எடுக்காதது வருந்தத் தக்கது என்றார். மேலும், நாடகப் பாத்திரங்கள் அமைக்க வேண்டிய முறைபற்றித் தெளிவாக எடுத்துரைத்து, சமூகப்பிரச்சனைகள் எவ்வாறு புகுத்தப்படவேண்டும் என்றும் விளக்கினார்.

அவரைத் தொடர்ந்து உரையாற்றியகல்வித்திணைக்களத்தைச் சார்ந்த திரு. என். சுந்தரலிங்கம் அவர்கள் வானொலி நாடகத் தயாரிப்பில் முக்கியத்துவம் பெறுகின்ற பல அம்சங்களைத் தெளிவு படுத்தினார். இலங்கை வானொலியில் நிகழ்ச்சித் தயாரிப்பிலும் பங்கெற்ற அனுபவம் வாய்ந்த இவர் தொடர்ந்து பேசுகையில், வானொலி நாடகப் பிரதியின் முக்கியத்துவம் பற்றியும், அதைத் தயாரிக்கும் முறைகள் பற்றியும் விளக்கினார்.

வானொலியின் இசையின் தாக்கம் பற்றிப் பேசவந்த போதனாசிரியர் எஸ். எஸ். பி. அமலராஜ் அவர்கள் வாத்தியக் கருவியின் உதவியுடன் செய்முறை விளக்கமளித்தார். வானொலியில் ஒலிபரப்பக் கூடிய பல்வேறு நிகழச்சிகள் பற்றிய விளக்கத்துடன், அவை எவ்வாறு இசையமைக்கப்பட வேண்டும் என்றும் எடுத்துரைத்தார். சந்தர்ப்பத்திற்கேற்ப மாறுபடும் இசைபற்றியும், அவை எத்தகைய இராக அமைப்பில் அமைவது சிறப்பானது என்பதையும் சுட்டிக் காட்டினார்.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

# பொதுவான பரலோக மந்திரத்தை அமைக்க முயற்சி

கொரியாவிலுள்ள கத்தோலிக்கரும் புரொட்டஸ்தாந்தரும் ஒரு பொதுவான பரலோக மந்திரத்தை உருவாக்கத் தீர்மானித்துள்ளனர்.

ஜுலையில் ஸோலிலுள்ள வை. எம். சி. ஏ. தலைமையகத்தில் நடந்த கருத்தரங்கொன்றின்போது கத்தோலிக்க, புரொட்டஸ்தாந்து கல்விமான்கள் ஒரு பொதுவான பரலோக மந்திரத்தை அமைப்பதுபற்றி ஆலோசித்தனர். தற்போதுள்ள செபம் கொரிய மக்களின் விசுவாசத்தை சரியாக வெளிப்படுத்துவதாயில்லை என அவர்கள் அபிப்பிராயப்பட்டனர்.

கத்தோலிக்க குருவான பிதா போல் யாங் மூ என்பவரும், புரொட்டஸ்தாந்து பேராசிரியர் சாங் நாக் என்பவரும் செபத்திற்கான இரு நகல்களைத் தயாரித்தனர். ஏனையோர் அவற்றின் இறையியல், மொழியியல் அம்சங்களை விமர்சித்தனர்.

கொரிய மொழியின் வழக்கையும் உச்சரிப்பையும் கருத்திற்கொள்ளவேண்டுமென்றும், சிறுவருக்கும் விளங்கக்கூடியதாகவும் மக்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தக்கூடியதாகவும் அது இருக்கவேண்டுமென்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

## அக்வீனோ மீண்டும் தெரியப்படலாம்-மதிப்பீடு

(யூக்கன் செய்தி)

மணிலா பல்கலைக்கழகம் ஒன்று தேசியமட்டத்தில் மேற்கொண்ட ஓர் மதிப்பீட்டு ஆய்வின்படி அடுத்தவருடம் நிகழப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் அக்வீனோ வெற்றிபெறும் சாத்தியக்கூறுகள் இருந்தாலும் ஏனைய வேட்பாளர்களும் மிக நெருக்கமாகவே நிற்பதாகக் காணப்பட்டது. அக்வீனோவுக்கு அடுத்தபடியாக முன்னாள் திரைப்பட நடிகர் ஜோசவ் எஸ்ட்றாடா, முன்னாள் விவசாய சீர்திருத்தச் செயலாளர் மிரியம் சந்தியாக்கோ, பாதுகாப்பு அமைச்சர் பிடெல் றாமோஸ் ஆகியோருடன் இன்னும் ஏழு வேட்பாளர்கள் உள்ளனர்.

கிட்டத்தட்ட எல்லா மக்களும் வாக்களிக்க ஆயத்தமாயிருந்தாலும், அவர்களுள் அரைவாசிப்பேர் தேர்தலால் நாட்டின் பிரச்சினைகள் தீரப்போவதில்லை எனக் கருதினர். நாட்டின் பல பிரச்சினைகள் அரசாங்கத்தின் சக்திக்கு அப்பாற்பட்ட வெளிநாட்டு நிகழ்வுகளாலும், இயற்கை அனர்த்தங்களாலும் ஏற்பட்டவை என உணர்கின்றனர்.

அரசியல் கொள்கைகளை விட வேட்பாளரின் தகுதிகளைத்தான் மக்கள் நோக்குகின்றார்கள் எனவும் "நல்லவர்", "சிறந்த தலைவர்", "நேர்மையானவர்" என்ற காரணங்களினால் மக்கள் ஒருவருக்கு வாக்களிக்கலாம் எனவும் ஆய்வாளர் கருதுகின்றனர்.

## வானொலி நாடக....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொழுது போக்குத் தேவை கருதி வானொலியை இயக்கிவிடும் மனிதனை, உடனே அணைத்துவிட்டுச் செல்லவிடாது அவ்விடத்தில் அமரச்செய்தலே எம் கடனாகும். முன் நடைபெற்ற நிகழ்வுகளையும், உரைகளையும் செவிமடுத்தபின் பேருரையாற்றிய பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி அவர்கள் மேற்கூறியவாறு வானொலி நிகழ்ச்சி எவ்வாறு அமைதல் வேண்டும் என்று குறிப்பிடுகையில் கூறினார். இலங்கை வானொலியின் முற்கால நிகழ்வுகளை நினைவுகூர்ந்த அவர், அக்காலத்தில் நிகழ்ச்சித் தயாரிப்பில் சிறப்பிடம் கொண்டு திகழ்ந்த "சானா" போன்றவர்களையும் நினைவுகூர்ந்தார். மேலும், நாடகப் பிரதியின் முக்கியம் பற்றி விளக்கிய அவர் வானொலி நடிகர்களின் சிறப்பு, அவர்களின் செயற்பாடுகள் பற்றியும், பிரதியில் காணப்படும் எழுத்தாளனின் எண்ணக் கருவை எவ்வாறு நடிப்பின் மூலம் வெளிப்படுத்தல் வேண்டும் என்றும் விளக்கினார். அன்னாரைத் தொடர்ந்து பேசவந்த சாந்தீகம் திரு பி. ஏ. சி ஆனந்தராசா அவர்கள் பயிலுனரோடு உரையாடியபின், நாம் செய்யும் வானொலி நாடகத்திலே எவ்வாறு கிறிஸ்தவ மதிப்பீடுகளைப் புகுத்துவது என்பது பற்றித் தன் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

"சமூக விழுமியங்கள்" எவ்வாறு வானொலி நாடகத்தின் மூலம் சென்றடைதல் வேண்டும் என, கலாநிதி பௌனகுரு அவர்கள் தனது சிறப்புச் சொற்பொழிவில், சமூகத்தில் ஏற்படும் மாற்றத்துக்கேற்ப வானொலி நாடகக் கருத்துக்கும் மாற்றமடைந்து வளர்ச்சியடைதல் வேண்டும் என்றார். நிகழ்ச்சிகளின் தாக்கமானது வெறும் பொழுது போக்காக மட்டும் நின்று விடாது சமூக விழுமியங்களை உயர்த்தவல்லதாக அமைதல் அவசியம் என்றும் எடுத்துரைத்தார்.

பயிற்சியாளர்களின் கன்னிமுயற்சியில் உருவான நாடகப் பிரதிகளைச் சீர்செய்தபின் உரையாற்ற வந்த திரு. குழந்தை சண்முகலிங்கம் அவர்கள், தான் பார்த்த நாடகப் பிரதியிலே புரையோடிப் போன நிகழ்ச்சித் தாக்கங்கள் இருப்பதாகக் கூறினார். பயிலுனர்களின் பிரதி பற்றி ஆய்ந்து அதன் குறை, நிறைகளைச் சுட்டியபின், 'வாழ்க்கையோடு பொருந்தாத எழுத்துருக்களை உருவாக்கி நாடகமாக்குவதைவிட, அப்படியான அவல நிலையைத் தவிர்க்க, நாடகம் எழுதாமல் இருப்பதே நலம் என்றார். மிகுந்த நகைச்சுவையோடு தற்காலச் சமூகப் பிரச்சனைகளைத் தொட்டுச் சென்றார்.

நெறியாளர்கள் பயிலுனர்களோடு இணைந்து கலை நிகழ்ச்சிகளில் ஒன்றித்தமை அன்றைய நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் சிகரமாய் அமைந்தது. மென்மேலும் இத்தகைய பயிற்சிப் பாசறைகள் நடைபெறவேண்டும் என்ற ஆர்வம் இருபகுதியினரின் உரைகளிலிருந்தும் வெளிவந்தது; இது சமூகத் தொடர்புச் சாதனத்தின் ஆணைக்குழுவின் முதல் வெற்றியாகும்.

பயிற்சியின்பின் பயிலுனர் அரங்கேற்றிய நாடகங்களை மதிப்பீடு செய்து பேசவந்த இன்றைய பயிற்சிப் பாசறையின் நெறியாளரான யாழ் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த திரு. என். சன்முகலிங்கன் பயிலுனர்களின் ஆக்கத் திறனைப் பாராட்டிப் பேசியபின், தனது நீண்டகால ஆசையும் இப்பாசறை நடைபெற்றதன் மூலம் பூரணமாயிற்றென்றும், விசேடவிதமாக, இன்றைய பயிற்சிப் பாசறை எந்த நோக்கத்துக்காக அமைக்கப்பட்டதோ, அந்த உயர்ந்த கருத்தான". கிறிஸ்தவ மதிப்பீடுகள் மக்களைச் சென்றடைதல்" என்னும் உயர் குறிக்கோள் நிறைவேற உங்கள் ஆக்கங்கள் அமைய வேண்டும் என்றும் கூறி, இன்றைய நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் நன்றி கூறினார்.

இரண்டு நாள் நடைபெற்ற இக்கருத்தரங்கில் குருக்கள் கன்னியர், பொதுநிலையினர், தொண்டர், மல்லிகை, சாளரம் நான் சஞ்சிகையாளர்களுடன் 40க்கு மேற்பட்டோர் கலந்து பயிற்சிபெற்றனர். யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க சமூகத் தொடர்புச் சாதன ஆணைக்குழுவின் சார்பில் திரு. யோசப் பாலா அவர்கள் இப்பயிற்சிப் பாசறையின் இணைப்பாளராக இருந்து அரும்பணிஆற்றியது குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு:– எஸ். எஸ். பி, அமலராஜ்.

## பாட்னா கத்தோலிக்க சங்கம் நீதிக்காக வாதாடும்

பீஹார் மாநிலத்திலுள்ள பாட்னாவைச் சேர்ந்த இரு கத்தோலிக்க இயக்கங்கள் தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்களின் சமூக நீதிக்காக உழைக்கத் தீர்மானித்துள்ளன.

அகில இந்திய கத்தோலிக்க சங்கத்தின் கிளையை அங்குரார்ப்பணம் செய்து வைத்த சங்கத் தலைவராகிய திரு. சோட்டிபாய் "சமூக பொருளாதார, அரசியல் மாற்றங்கள் செபத்தினால் மட்டும் நிகழ்வதில்லை, தாம் தொடர்ந்து குரல் எழுப்பி, அது கேட்கும்படி செய்யவேண்டும்" என அங்கு சமூகமாயிருந்த 150 பிரதிநிதிகளுக்குக் கூறினார்.

பாட்னா மறைமாவட்டத்தில் 58,000த்துக்கு மேற்பட்ட கத்தோலிக்கர் உள்ளனர். அவர்களுட் பெரும்பாலோர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்.

தாராளகுணத்துடன் முன்வந்து திருச்சபையின் பணியில் பங்குகொள்ளுமாறு திரு சோட்டிபாய் பொதுநிலையினருக்கு அழைப்பு விடுத்தார்.

அனைத்து இந்திய கத்தோலிக்க சங்கம் 1919இல் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது 450,000 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. நாட்டின் 120 மறைமாவட்டங்களில் 104 கிளைகளை அமைத்துள்ளது.

## இரக்கம் ஒரு...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு நிற்கும் மனிதர்களையும் மாறி, மாறி விழி பிதுங்க பார்த்து அடுத்தது தாங்கள்தானே என மரண பயத்துடன் நின்றன.

எனக்கு முன் நின்றவர் கோழிக்காரனிடம் 'தம்பி ஒரு கிலோவில கோழி ஒன்று உரித்துத்தாப்பா, என்றார். எங்கோ கேட்ட குரல்போலத் தெரிகிறதே என அவரை உற்றுப் பார்த்தேன். எனக்குத்தலையே சுற்றுவதுபோல இருந்தது. அவர் சில நிமிடங்களுக்கு முன் வாகனத்தால் மோதுண்டு அகால மரணத்தைத் தழுவிய கோழிக்காக இரக்கப்பட்டு வாகனக்காரரைத் திட்டித் தீர்த்த அந்த சித்தாத்த மனிதர்தான். என்ன சமுதாயமடா? வாகனத்தால் மோதுண்ட கோழிக்காக இரக்கப்பட்டவங்க இப்போதாங்கள் சுவைத்துச் சாப்பிட கோழி ஒன்றைப் பலியாக்குகிறார்களே!

ஒரு இன விபத்தால் பரிதாபப்படும் சமுதாயம் அதே இனம் தம்மால் அழிக்கப்படும்பொழுது பரிதாபப்படுவதில்லையே! எனப் பெருமூச்சு விட்ட வண்ணம் அவ்விடத்தை விட்டு காய் கறி வாங்க அந்தப் பக்கம் நடந்தேன். "என்ன சார், கோழி வேணுமா?" என கோழிக்காரர் என்னை அழைக்க, அவனுக்கு என்ன பதில் கூறுவது என எண்ணி ஒரு அசட்டுச் சிரிப்பை மட்டும் உதிர்த்தேன். கூட்டிலுள்ள கோழிகளோ! வியப்போடு என்னை நோக்கினது.

## திருவழிபாட்டு ஓவியக் கண்காட்சி 1991

மேற்படி ஓவியக் கண்காட்சி எதிர்வரும் புரட்டாதி 5ஆம் 6ஆம், 7ஆம் திகதிகளில் யாழ். மறைக் கல்வி நிலையத்தில் இடம்பெறும். பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் யாவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

நேரம்:– காலை 9-00 — மாலை 5–00

அன்பளிப்பு:– ரூபா 2–00.

A/30/91 அருள் திரு. ஜே. நீக்கிலஸ்

## கத்தோலிக்க...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேறு பகுதிகளில் வைக்கப்படும் கண்காட்சிகளிலும் அவர்களது பொருள்கள் காட்சிக்கு வைக்கப்படுகின்றன.

இச்சங்கம் ஓர் தொழிற்சங்கமாக இணைக்கப்பட்டுள்ளதுடன், மீனவர் கிராமங்களில் கூட்டுறவு கடன்வழங்கு சங்கங்களையும் நடத்திவருகிறது.

## மரண ஞாபக அறிவித்தல்

ஆகஸ்ட் – 30

யோசவ் கனகரத்னா அரியரட்னம்
4 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி.

சீவியத்தில் நினைத்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்.

தாய், சகோதரர், மைத்துனர், அருட்சகோ. தாசிலா,

A/29/91

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இல. QB/1001/58/81

**உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org